இணைப்பு—தொடர்ச்சி

(1)		(2)	(3)	
8.	நீலகிரி	11	1,870	00
9.	தர்மபுரி	66	11,2[illegible]0	00
10.	சேலம் ..	67	11,390	00
11.	இராமநாதபுரம்	70	11,900	00
12.	திருநெல்வேலி	70	11,900	00
13.	மதுரை	70	11,900	00
	மொத்தம் ..	827	1,49,590	00

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பேரவைக்கு விதி 32-இன் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

2. அறிக்கை அளித்தல்.

அரசு ஊழியர்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில அரசு ஊழியர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயற்படுத்தி வருகிறது என்பதை இந்த அவை அறியும். பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அல்லது பணியாளர் இறந்துவிடுங்கால், உதவி அளிக்கவேண்டிய அவசியம் கருதியும் சில செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் இருந்து வந்துள்ளன. அரசு ஊழியர்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் ஒன்றை அரசு செயலுக்குக் கொண்டுவர வேண்டுமென, அரசிதழ் பதிவில்லாத அரசு ஊழியர்களின் சங்கமும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. அரசு ஊழியர்கள் குறிப்பிட்ட தொகையை மாதா மாதம் கட்டி, பணியிலிருக்கும் போதே அரசு ஊழியர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பத்துக்கு இந்த உதவித் தொகை

அளிக்கப்படவேண்டும் என்றும், அல்லது அரசு ஊழியர் ஓய்வு பெறும்போது இத்தொகை அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் ஊழியர்கள் சங்கம் கோரியுள்ளது. இக்கருத்துக்களை மனத்தில் கொண்டு அரசு ஒரு புதிய திட்டத்தை வகுத்துள்ளது. திட்டத்தின் விவரங்கள் வருமாறு:

இப்புதியத் திட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் குடும்ப நல நிதித் திட்டம் எனப் பெயர் பெறும். இத்திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள் அனைவரும் ஒவ்வொரு மாதமும் ரூ. 10 செலுத்த வேண்டும். இத்தொகை அவர்கள் மாதச் சம்பளப் பட்டியலில் இருந்து பிடித்துக் கொள்ளப்படும், இத்திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டபின், பணியில் இருக்கையில் ஊழியர் ஒருவர் இறந்துவிட்டால் அவர் ஆற்றிய பணிக்கால அளவு எவ்வளவாக இருந்தபோதிலும் அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 கொடுக்கப்படும். தொகை செலுத்தும் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அல்லது அவர்கள் பணியிலிருந்து விலகிச் செல்லும்போது அவர்களுக்கு இந்நிதியிலிருந்து அவர்கள் செலுத்தி உள்ள தொகை, அதற்கேற்ப அரசு செலுத்தும் தொகை (contribution) ஆகியவை அவர்களுக்கு கொடுக்கப்படும். எடுத்துக் காட்டாக, இத்திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு 10 ஆண்டுகள் கழித்து பணியிலிருந்து ஓய்வு பெறும் அரசு ஊழியர் ஒருவர் இந்த நிதிக்கு ரூ. 1,200 தொகை செலுத்தியிருப்பார். அரசு அளிக்கும் தொகை உட்பட அவர் மொத்தம் ரூ. 1,600 பெறுவார். அதே போல, 20 ஆண்டுகள் கழித்து பணியிலிருந்து ஓய்வு பெறும் ஊழியர் மொத்தம் ரூ. 4,000 பெறுவார். இதில் அவர் செலுத்திய தொகை ரூ. 2,400. அரசு அளிக்கும் தொகை ரூ. 1,600. 30 ஆண்டுகள் கழித்துப் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர் ரூ. 7,200 பெறுவர். இதில் அவர் செலுத்தும் தொகை ரூ. 3,600. அரசு செலுத்தும் தொகை ரூ. 3,600. அரசு ஊழியர்களுக்கு கணிசமான அளவு நன்மை பயக்கும் இத்திட்டத்தினை இம்மன்றம் வரவேற்குமென நான் நம்புகிறேன். இத்திட்டம் 1974 சனவரி முதல் செயலுக்குக் கொண்டுவரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்ததாக, திரு. கே. எ. வகாப் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டுவந்திருக்கிறார்கள். அதைப்பற்றி விளக்கும்படி அவரை அழைக்கிறேன்.